இராசிபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு. இரா.சேகர்,பி,இ.,

ந.க.எண்.1699/2024/எப்1 நாள்.31.07.2024

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் – இராசிபுரம் நகராட்சி – வார்டு–27, கோனேரிப்பட்டி மேற்கு பிளாக் தெரு பகுதியில், வார்டு – D, பிளாக்– 8, நகர புல எண். 106/15– இல் 1.40 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரரின் 13.06.2024 –ஆம் தேதிய விண்ணப்பம்.
2. உதவி இயக்குநர் மாவட்ட ஊரமைப்பு அலுவலகம் நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். ROC.NO.NKL/OCKFR6CW/23098/ 2024/ TCP, நாள். 10.04.2024.
3. பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவின் 28.06.2024 மற்றும் 15.07.2024 –ஆம் தேதிய குறிப்பு.
4. தானப்பத்திர எண். 4578/2023 நாள்.03.07.2023.
5. இந்நகராட்சியில் மனுதாரர் செலுத்தப்பட்ட தொகை மொத்தம் ரூ.7,40,870/–யினை (ரூ.6,80,000/– மற்றும் ரூ.60,870/–) இந்நகராட்சி பற்றுச்சீட்டு எண். 053/01/2/24–25/0001903 மற்றும் 053/01/2/24–25/0001902, நாள்.16.07.2024.
6. இந்நகர்மன்ற தீர்மான எண்.590, நாள். 26.07.2024.

ஒஒஒ

ஆணை :

இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–27, கோனேரிப்பட்டி மேற்கு பிளாக் தெரு பகுதியில், வார்டு – D, பிளாக்– 8, நகர புல எண். 106/15– இல் 1.40 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு (28 குடியிருப்பு மனைகள்) அனுமதி வழங்கக்கோரி பார்வை–1 இல் கண்டுள்ளபடி மனுதாரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை–2 இல் கண்டுள்ள உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் நாமக்கல், அவர்களின் மனைபிரிவு வரைபட எண். SWP/DTCP/NAMAKKAL/LAYOUT.NO.95/2024 நாள்.10.04.2024–இல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகளான தார் சாலைகள், தெருவிளக்குகள்,குடிநீர் குழாய் வசதி, மழைநீர் கால்வாய் ஆகிய வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது என்று பார்வை 3 இல் கண்டுள்ளபடி நகாராட்சி, பொறியாளர் பிரிவு மூலம் ஆய்வு செய்யப்பட்டு குறிப்பு பெறப்பட்டுள்ளது. மேலும் ,பாதாள சாக்கடை அமைக்க பார்வை–5ல் கண்டுள்ளவாறு ரூ.6,80,000/– தொகையினை இந்நகராட்சி பற்றுசீட்டு எண் 053/01/2/24–25/0001903, நாள்.16.07.2024ல் செலுத்தியுள்ளார். மேலும், இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய இதரக் கட்டணம் மொத்தம் ரூ.60,870/– இந்நகராட்சி பற்றுச்சீட்டு எண். 053/01/2/24–25/0001902, நாள்.16.07.2024ல் மனுதாரர் செலுத்தியுள்ளார்.

.....2

பார்வை 4 இல் கண்டுள்ளபடி மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் தானப்பத்திர எண். 4578/2023 நாள். 03.07.2023 –ன்படி ஆணையாளர் பெயரில் தானமாக பதிவு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு துறை மூலம் இந்நகராட்சியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனைப்பிரிவில் சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு 1881.45சதுர மீட்டர் இடமும், பொது உபயோகத்திற்காக 19.36 சதுர மீட்டர் இடமும் இந்நகராட்சிக்கு தானமாக பெறப்பட்டதை பின்னேற்பும் மற்றும் மனைப்பிரிவிற்கு இந்நகர்மன்றம் பார்வை 6–இல் கண்டுள்ளபடி இறுதி ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை 2– இல் கண்டுள்ள உதவி இயக்குநர் மாவட்ட ஊரமைப்பு அலுவலகம் நாமக்கல் அவர்களின் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையிலும், மனைப்பிரிவிற்கு இந்நகர்மன்றம் இறுதி ஒப்புதல் வழங்க நகர் மன்ற தீர்மான எண். 590, நாள். 26.07.2024 இல் ஒப்புதல் வழங்கப்பட்டதின் அடிப்படையிலும் இம்மனைப்பிரிவிற்கு பார்வை 2–இல் கண்ட உத்தரவில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

MUNICIPALITY OFFICE Namakkal Dist. IRAIYAPURAM

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.

இணைப்பு; ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்

பெறுநர் ;

திரு. எல். கண்ணன் த/பெ. லோகநாதன்,
கதவு எண்.156A, மாரியம்மன் கோவில் தெரு, தண்ணீர் பந்தல் காடு
ஆத்தூர் மெயின் ரோடு, மூலப்பள்ளிபட்டி அஞ்சல்,
இராசிபுரம், நாமக்கல்.–637406

நகல்;

1. உதவி இயக்குநர் மாவட்ட ஊரமைப்பு அலுவலகம் நாமக்கல் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
2. சார்பதிவாளர் அவர்கள், சார்ாதிவாளர் அலுவலகம், இராசிபரம்.
3. தமிழ்நிலம் இணையதளத்தில் பதிவு செய்வதற்காக வட்டாட்சியர், நாமக்கல் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.
4. நகர்சார் ஆய்வர், இராசிபுரம் (சாலைகள் மற்றும் நகராட்சி பொது ஒதுக்கீடு இடத்தை உட்பிரிவு செய்ய உத்தவிடப்படுகிறது.)
5. வருவாய் ஆய்வர், இராசிபரம் நகராட்சி, (புதிய காலிமனை வரி விதிப்பிற்க்காக மேல் நடவடிக்கைக்கு).
6. நகராட்சி பொறியாளர், இராசிபுரம் நகராட்சி,(சாலை பதிவேட்டில் பதிவு செய்வதற்காக).
7. The Chairman, Tamil Nadu Real Estate Regularity Authority,No.1A.CMDA Tower II,1ST Foor.Gandhi Irwin Bridge Road. Egmore, Chennai-600 008.